# வாழ்த்து

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 5, பருவம் 1, பாடம் 1**

சு. கவிதா
கார்த்திகேயன்
நல். கருணாநிதி
அருள் மொழி

**கால மாற்றம், கருத்து மாற்றம், செயல் மாற்றம் - மாற்றம் மாணவர்களை வளர்த்தெடுக்கும்!**

## நோக்கம் :

- பாடல்களைப் படித்து புரிந்து கொள்ளல்.
- “மாற்றம்” - காரணம் விளைவு பற்றி உணர்த்துதல்
- வாசிப்பு மற்றும் சொற்களஞ்சியப் பெருக்கம்

## ஆயத்தப் படுத்துதல்:

மேசை மேல் தாள்கள், கத்தரிக்கோல், கலர் பென்சில்(ஸ்கெச், க்ரையான்) , பென்சில் போன்ற பொருட்களை வைக்க வேண்டும். மாணவர்களைத் தாளை எடுத்து அவர்களுக்கு விருப்பமானதைச் செய்யச் சொல்ல வேண்டும். படம் வரைவர், கப்பல் செய்வர், பூ செய்வர், எழுதுவர்... இப்படி அவர்கள் விரும்பும் ஏதோ ஒன்றைச் செய்து வெள்ளைத்தாளை வேறொன்றாக மாற்றுவர் / உருவாக்குவர்.

- **உரையாடல்** :

வெள்ளைக்காகிதத்தை ஒவ்வொரு மாணவர்களும் தாங்கள் விரும்பியபடி, அவர்களுக்குப் பிடித்த ஏதோ ஒன்றைச் செய்து முடித்ததும் அது தொடர்பான உரையாடலை ஆசிரியர் தொடங்க வேண்டும். இவ்வுரையாடலின் இறுதியில் மாற்றம் / புதிதாக உருவாக்குதல் பற்றிய சிந்தனையை மாணவர்கள் மனதில் பதிய வைக்க வேண்டும். (மாற்றம் இயல்பானது, பழமையிலிருந்து புதுமைக்கு, அதாவது நமது பழங்கால சிந்தனையில், சாதிய வேறுபாடு, ஆண் பெண் வேறுபாடுகள் இருந்தது. அனைவரும் சமம் என்ற கருத்தை நோக்கி பயணிக்கிறோம். அதே போல், நாம் பயன்படுத்திய பொருட்களிலும் பார்க்கலாம். பல் தேய்க்கக் குச்சி பயன்படுத்திய நாம் பிரஷ் பயன்படுத்துகிறோம். ‘மாற்றம் ஒன்றே மாறாதது’ என்பதை அடிப்படையாகக் கொண்டு உரையாடல் அமைதல் நல்லது.) தேவைப்பட்டால் புதிதாக மாற்றப்பட்ட காக்கா கதை, ஆமைகதை போன்றவைகளைக் கூறலாம்.

- தனக்குத் தெரிந்த எளிய பாடல்களைப் பாட வைத்தல். அவை இயற்கை சார்ந்த பாடல்களாக இருத்தல் நல்லது.

-தன்னைச் சுற்றி (ரேடியோ, டி.வி, கச்சேரி...) இதுபோன்ற பாடல்களைக் கேட்ட அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளச் செய்தல்.

-அவர்கள் பாடிய, கேட்ட பாடல்களில் அவர்களுக்குப் பிடித்த வரியைக் குறிப்பிடும்படி கேட்டல். அதிலுள்ள இயற்கை பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறச்செய்தல்.

- சொல் விளையாட்டு: ஒருவர் ஒரு வார்த்தையை எழுத வேண்டும். மற்றவர் அவ்வார்த்தையை வேறு வார்த்தையாக மாற்ற வேண்டும். 1) மாற்றம்

- ஏமாற்றம் 2)வா - வாக்கு - வாங்கு .

## ஆராய்தல்:

• பயிற்சித் தாள்: (கீழுள்ள கேள்வித்தாளை மாணவர்களுக்குக் கொடுத்து எழுதச் சொல்லிப் பின் பொதுவில் பகிர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும்)

1. உன்னிடம் உனக்குப் பிடித்த குணம் எது? மாற்ற விரும்பும் குணம் மற்றும் செயலைக் குறிப்பிடு.

• மாணவர்களை நான்கு குழுவாகப் பிரித்தல்.

அட்டையில் கவிதை வரி மற்றும் அதற்கான விளக்கப் படம் இருக்கும். கவிதையிலுள்ள புது வார்த்தையின் பொருள் அட்டையின் பின்புறம் எழுதியிருக்கும். தங்களுக்குக் கொடுத்த அட்டையிலுள்ள கவிதை வரி பற்றிப் பகிர்ந்துகொள்ளச் செய்தல்.

1. திருவடி தொழுகின்றோம் -அன்போடு
   திருவடி தொழுகின்றோம்

(இவ்வரி மற்றும் இதை உணர்த்தும் படம் அட்டையின் முன் பக்கமும் பின் பக்கம் கீழ்வருவதையும் இணைத்துத் தர வேண்டும்)

தருமம்- அறம் (அறம் செய விரும்பு)

தழைத்திட- பெருகிட (நிறைய, மிகுந்த)

2. தருமம் தழைத்துடவே
   சத்தியம் ஓங்கிடவே

3. திருவளர் கலையெல்லாம்
   தினமும் வளர்ந்திடவே

4. அருள்வழி போற்றி மக்கள்
   அனைவரும் வாழ்ந்திடவே

## விளக்கமாகக் கற்றல்:

மாணவர்கள் குழுவாகத் தங்கள் அட்டையிலிருந்த வரிகள் படங்கள் சொல்பொருள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு தாங்கள் படித்து புரிந்து விவாதித்ததை மற்ற குழுக்கள் முன்னிலையில் பகிர்ந்துகொள்ளுதல். ஆசிரியர் மாணவர் சொல்லும்போது கவனித்துச் சரியான முறையில் சரியான கருத்தைக் கூறவில்லை எனில் உதவுவார்.

- பாடலை வாசித்து மாணவர்கள் திரும்பக் கூறுதல்.
- பாடலையும் பாடல் கருத்தையும் பாடலின் உட்பொருளையும் இணைத்து ஆசிரியர் கூறுதல்.
- மாணவர்கள் பாடலின் உட்பொருளைத் தொகுத்து எழுதுதல்.
- தினத் தந்தி பத்திரிக்கையில் சனிக்கிழமை தோறும் வெளிவரும் சொற்கள் உருவாக்கும் போட்டியில் மாணவர்கள் அனைவரும் கலந்துகொள்ள உதவுதல்.

## விரிவாக்குதல்:

(ஒரு நாளைக்கு ஒவ்வொன்றாகச் செய்வது நல்லது)

- செய்தித்தாளில் நல்ல செயல்களைக் கண்டு பிடித்து வகுப்பறையில் பகிர்ந்து கொள்வோம்.
- நல்ல செயல்களைச் சுட்டிக்காட்டும் கதைகளைச் சேகரித்தல்.
- சிறுவர் பாடல்களை வாசித்து விளக்கமளிக்கச் செய்தல்.
- மாற்றம்- அவர்கள் கவனித்த நிகழ்வுகளை வகுப்பறையில் விளக்குதல்

- பள்ளியில் உள்ளவற்றை மாற்றியமைக்கும் திட்டம் ஒன்றைத் திட்டமிட்டு செயல் படுத்துதல்.
- வீட்டிலும் நாட்டிலும் நிகழ வேண்டிய மாற்றங்களைப் பட்டியலிடச்செய்தல்.
- அவர்கள் சுலபமாகப் படிக்கக் கூடிய பாடல்களைக் கொடுத்து படிக்க வைத்தல்

## மதிப்பிடுதல் :

பகுதி: 1 உரையாடல்

-தேர்ந்தெடுத்த பாடல்களைக் கரும்பலகையில் எழுதி அது தொடர்பான வினாக்களைக் கேட்டு **எழுதுதல்.**

பகுதி - 2

பாடப்புத்தகத்திலுள்ள அனைத்துப் பயிற்சிகளையும் பயிற்சியளித்தல்.

குறிப்பு:

1) வெ. உமா மஹேஷ்வரி எழுதிய மாற்றுக் கதைகள் - பழைய கதைகள் புதிய பார்வையில் வெளிவந்துள்ளது அதைப் பயன்படுத்தலாம்.

2) எளிய பாடல்களைப் பாட மற்றும் வாசிக்க பாரதிதாசனின் கவிதைகளைத் தேர்ந்தெடுத்து படிக்க/பாட வைக்கலாம்

3) இப்பாடத்திற்கான பயிற்சித்தாள் இணைக்கப் பட்டுள்ளது.

**இப்பாடத்திற்கான பயிற்சித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.**



**சு. கவிதா**, தொ.ப.ஆ, அ.தொ.ப. மணவெளி (அ)



**கார்த்திகேயன்**, தொ.ப.ஆ, அ.தொ.ப. நரம்பை



**நல். கருணாநிதி**,தொ.ப.ஆ, அ.தொ.ப. பெருங்களூர்



**அருள் மொழி**, ஐக்கியம் உயர்நிலைப் பள்ளி, ஆரோவில்